# மண்புழு உரம்:கையேடு விவேகானந்த கேந்திரம்



# மண்புழு உரம்:கையேடு விவேகானந்த கேந்திரம்

## மண்புழு உரம் என்றால் என்ன?

மண்புழு உரம் இயற்கை நமக்கு அளித்துள்ள இனிய வரம் எனலாம். இயற்கையில் கிடைக்கக்கூடிய அங்கக்கழிவுகளை உணவாக உட்கொண்டு குடலில் உள்ள நுண்ணுயிர் மற்றும் நொதிகளினால் செரிக்கப்பட்டு சிறுசிறு உருண்டைகளாக மலப்புழை வழியாக வெளித்தள்ளும் **நாங்கூழ்கட்டிகளே** மண்புழு உரம் எனப்படும்.

## மண்புழு உரத்தை தயாரிக்கும் முறைகள்

மண்புழு உரத்தை 3 முறைகளில் தயாரிக்கலாம்.

1, குழிமுறை 2. பெட்டிமுறை 3. படுக்கைமுறை



குழிமுறை



பெட்டி முறை

இந்த மூன்று முறைகளிலும் தயாரிக்கப்படும் உரத்தின் தரத்தில் அதிக வேறுபாடு கிடையாது. இந்த மூன்று முறைகளிலும் பெட்டி முறையே சிறந்தது.

இவ்வழிக்கென எவ்விதமான பெட்டியையும் நாம் பயன்படுத்தலாம். பெட்டியின் அளவைப் பொறுத்தே மண்புழுக்களின் எண்ணிக்கையும் இருக்கும். இப்பெட்டியை செங்கல்லாலோ, சிமென்டினாலோ, மரத்தினாலோ, பிளாஸ்டிக்காலோ உருவாக்கிக் கொள்ளலாம். கல்பெட்டிகள்



படுக்கை முறை

அல்லது கல்பலகைகள் இவை கிடைத்தால் பக்கவாட்டிலும், பெட்டியின் அடியிலும் கல்பலகைகளைப் பயன்படுத்திக் கொண்டு சிமெண்டினால் அவற்றை ஒன்றிணைக்க வேண்டும்.

## மண்புழு உரம் தயாரித்தல் “நார்டெப்” முறை

நிலை 1. முதலில் நமக்கு தேவையான இடத்தை சமமாக ஆக்கிக் கொள்ளவும்

நிலை 2. முதலில் பாலித்தீன் ஷீட் அல்லது பழைய பிளாஸ்டிக் ஷீட்டை விரிக்கவும்

நிலை 3. அதன்மேல் ஒரு அடுக்கு நன்கு காய்ந்த தேங்காய் கரம்பலை அதன்மீது நார்பகுதி மேலாக இருக்கும்படி நெருக்கமாக பரப்பவும்.

நிலை 4. பின்பு அதன் மேல் சாணக் கரைசலை அல்லது (சாண எரிவாயு கழிவை) அதன் மீது தெளிக்கவும்.

நிலை 5. பின்பு மக்கிய (அழுகிய) காய்கறிக்கழிவுகள், விவசாயக் கழிவுகள் (மண்புழு எதை எல்லாம் எளிதாக சாப்பிடுமோ அதை எல்லாம்) அதன் மீது 2 அல்லது 2.5 அடி உயரத்திற்கு போடவும்.

நிலை 6. அதன் மீது தண்ணீர் தெளிக்கவும் இரண்டு நாட்கள் அப்படியே விட்டு விடவும். (ஈரம் காயாமல் பார்த்துக்கொள்ள வேண்டும்)

# மண்புழு உரம்:கையேடு விவேகானந்த கேந்திரம்

## மண்புழு உரத்தின் சத்தின் அளவு

(பலவகையான இலை, தழைகள் மற்றும் காய்கறிக் கழிவுகள்)

| | |
|---|---|
| ஆர்கானிக் கார்பன் | 9.15 to 17.98 % |
| மொத்த நைட்ரஜன் | 0.5 to 1.5 % |
| பாஸ்பரஸ் | 0.1 to 0.3 % |
| பொட்டாசியம் | 0.15 to 0.56 % |
| சோடியம் | 0.06 to 0.3 % |
| கேல்சியம் & மெக்னிசியம் | 22.67 to 70 MEq/100g |
| காப்பர் | 2.0 to 9.5 ppm |
| இரும்பு | 2.0 to 9.3 ppm |
| சிங் | 5.7 to 11.5 ppm |
| சல்பர் | 128.0 to 548.0 ppm |

## மண்புழு உரத்தைத் தயாரித்தலும், சேகரித்தலும்

**நிலை 1.** அடிக்கடி கொஞ்சம் தண்ணீர் தெளித்து இந்தக் குவியல் முழுவதையும் ஈரமாக வைத்திருக்கவும். அதிகம் தண்ணீர் கெடுதலை விளைவிக்கும்.

**நிலை 2.** நான்கு முதல் ஆறு வாரங்களுக்குள் இக்குவியல் முழுவதும் மக்கிப் போயிருக்கும். புழுக்களின் எண்ணிக்கைக்குத் தகுந்தாற்போல் கழிவுப் பொருள் மக்குவதற்கு ஆகும் காலம் மாறுபடும். இப்போது மக்கிய குப்பையின் நிறம் கருப்பாகவும், எடை குறைந்து லேசாகவும் இருக்கும். சாதாரணமாக புழுக்கள் மேலே வந்துவிடும். அவற்றில் பல ஈரச்சாக்கில் ஒட்டிக்கொண்டு விடுவதையும் பார்க்கலாம். இப்போது மண்புழு உரம் பயன்படுத்தத் தயாராகிவிட்டது.

## மண்புழு உரத்தின் சத்தின் அளவு

(பலவகையான இலை, தழைகள் மற்றும் காய்கறிக் கழிவுகள்)

| | |
|---|---|
| ஆர்கானிக் கார்பன் | 9.15 to 17.98 % |
| மொத்த நைட்ரஜன் | 0.5 to 1.5 % |
| பாஸ்பரஸ் | 0.1 to 0.3 % |
| பொட்டாசியம் | 0.15 to 0.56 % |
| சோடியம் | 0.06 to 0.3 % |
| கேல்சியம் & மெக்னிசியம் | 22.67 to 70 MEq/100g |
| காப்பர் | 2.0 to 9.5 ppm |
| இரும்பு | 2.0 to 9.3 ppm |
| சிங் | 5.7 to 11.5 ppm |
| சல்பர் | 128.0 to 548.0 ppm |

## மண்புழு உரத்தைத் தயாரித்தலும், சேகரித்தலும்

**நிலை 1.** அடிக்கடி கொஞ்சம் தண்ணீர் தெளித்து இந்தக் குவியல் முழுவதையும் ஈரமாக வைத்திருக்கவும். அதிகம் தண்ணீர் கெடுதலை விளைவிக்கும்.

**நிலை 2.** நான்கு முதல் ஆறு வாரங்களுக்குள் இக்குவியல் முழுவதும் மக்கிப் போயிருக்கும். புழுக்களின் எண்ணிக்கைக்குத் தகுந்தாற்போல் கழிவுப் பொருள் மக்குவதற்கு ஆகும் காலம் மாறுபடும். இப்போது மக்கிய குப்பையின் நிறம் கருப்பாகவும், எடை குறைந்து லேசாகவும் இருக்கும். சாதாரணமாக புழுக்கள் மேலே வந்துவிடும். அவற்றில் பல ஈரச்சாக்கில் ஒட்டிக்கொண்டு விடுவதையும் பார்க்கலாம். இப்போது மண்புழு உரம் பயன்படுத்தத் தயாராகிவிட்டது.

நிலை 3. இரண்டு நாட்கள் தண்ணீர் தெளிப்பதை நிறுத்தி விட வேண்டும். இப்போது இந்தக் குவியல் காய்ந்து விடும். மண்புழுக்கள் கீழே போய் இன்னும் ஈரமாக இருக்கும் தளத்துக்குப் போய்விடும்.

நிலை 4. தயாரான மண்புழு உரம் குவியலின் மேல் பரப்பில் குவித்து வைக்கப்படலாம். மீதம் இருக்கும் ஓரிரு புழுக்கள் இக்குவியலிலிருந்து இரண்டு மூன்று மணி நேரத்துக்குள் கீழே இறங்கிப் போய்விடும். இக்குவியலின் மேல் பகுதியைச் சுரண்டி மக்கிய புழு உரமாக தனிக் கொட்டகையில் சேர்த்து வைக்கவும்.

நிலை 5. மண் புழுக்கள் எல்லாம் கீழ் மட்டத்திற்கு வந்துவிடும். திரும்பவும் அழுகக் கூடிய கழிவுப் பொருள்களை நிலை ஒன்று முதல் நிலை எட்டில் கூறியபடி மேலேற்றிப் பரப்பலாம்.

**குறிப்பு:** தண்ணீர் தெளிப்பது கோடைகாலத்தில் ஒரு நாளைக்கு இரண்டு தடவையும், மழைக்காலத்தில் ஒரு நாளைக்கு ஒரு தடவையுமாகச் செய்ய வேண்டும். தண்ணீர் தெளிப்பதற்கு முன் ஈரப்பதம் இருக்கிறதா என்று கவனிக்க வேண்டும். முன் எச்சரிக்கையுடன் தண்ணீர் தேங்குவதைத் தவிர்க்க வேண்டும். குவியலின் குறுக்கேயும், ஊடேயும் தண்ணீர் பாய்ந்து விடாமல் பாதுகாக்க வேண்டும்.

**மண்புழு உரத்தினைக் கீழ் கண்ட அளவில் பயன்படுத்த வேண்டும்.**

| | |
|---|---|
| நெல் வயல் | - 1 ஏக்கருக்கு 2 டன் |
| செடிகள் | - 1 செடிக்கு 250/500 கிராம் |
| மரங்கள் | - 1 மரத்திற்கு 5 கிலோ |
| தொட்டியில் உள்ள செடிகள் | - 150 கிராம் |

# மண்புழு உரம்:கையேடு விவேகானந்த கேந்திரம்

**மண்புழு உரத்தின் சிறப்பியல்புகள்:**

1. உற்பத்தியான விளைபொருள்களின் சுவை, பளபளப்பு அளவு, பருமன் அழுகாமல் நீடித்து இருக்கும்.
2. உணவு உற்பத்தி பெருகுகிறது.
3. பூச்சிகளின் தாக்கம் குறையும்.
4. பூச்சிக் கொல்லி மருந்துகளின் தேவை ஐம்பது முதல் அறுபது சதவிதம் வரை குறையும்.
5. வருடத்திற்கு வருடம் விளைச்சல் குறையாமல் இருக்கும்.
6. மண்ணின் தரம் உயர்கிறது.
7. இம்மண்ணில் பாக்டீரியா, நுண்ணுயிர்களின் எண்ணிக்கை அதிகமாகின்றன.
8. மண் அரிப்பைத் தடுத்து சத்தான மேல் மண்ணைப் பாதுகாக்கிறது.
9. மண்ணின் நீர் பிடிப்புத் தன்மை அதிகரிக்கிறது.
10. தரிசு நிலங்களை மேம்படுத்த பயன்படுகிறது.
11. நீராவிப் போக்கை குறைக்கிறது.
12. மண்புழுக்களின் மூலம் இயற்கை உழவு நிகழ்கிறது.

***மேலும் விபரங்களுக்கு அணுக வேண்டிய முகவரி***


**செயலாளர்**

**விவேகானந்த கேந்திரம்**

இயற்கை வள அபிவிருத்தித் திட்டம்

விவேகானந்தபுரம் - 629 702, கன்னியாகுமரி.

Phone: 04652-246296, 247126

e-mail: ngc_vknardep@sancharnet.in

vknardep@gmail.com

www.vknardep.org


மண்புழு வளர்ப்போம் !

குப்பையைத் தங்கமாக்குவோம் !!

நோயின்றி வாழ்வோம் !!!

# மண்புழு உரம்:கையேடு விவேகானந்த கேந்திரம்



மேலே: மண்புழு உரம் குறித்த விளக்க வகுப்பு

கீழே: முதலில் மண்புழு உரம் சிறிய சேகரிப்பானில் அளிக்கப்படுகிறது




இயற்கை விவசாயத்தால் உண்டாகும் நன்மைகள்
வழக்கமான விவசாயம்
இயற்கை விவசாயம்
ரசாயன உரமின்றி
வருமானம்
அரசு மானியம்
வரவு
அ
செலவு
செலவு
லாபம்
ஆ
எண்ணெய்
எண்ணெய்
உள்ளூர் விவசாய வசதி
இயற்கை வக்தி வளங்கள்
நட்டம் நட்டம் நட்டம்
மண் அரிப்பு
இ
தண்ணீர் வடிகால்
தண்ணீர் வடிகால்
மாசுபடுதல்
மாசுபடுதல்
உயிர் உள்ளுரை வளங்கள்
உயிர்வளம் பெருகுதல்
ஈ
மண்ணின் ஆயுள்
மண்ணின் ஆயுள்
காட்டுயிர் பயோமாஸ்
பயோமாஸ்
கிருமிகளால் நஷ்டம்
பயிர்க்கொல்லி கிருமிகளால்
பண்ணையில் வேலை வாய்ப்பு
பண்ணையில் வேலை வாய்ப்பு
உ
உணவின் தரம்
உணவின் தரம்
மனிதனின் உடல்நலம்
மனிதனின் உடல்நலம்
உயிருக்கு நன்மைகள்
உயிருக்கு நன்மைகள்
அ) பணக்கணக்கு
இ) புறச்சூழல் லாப நஷ்டக் கணக்கு
உ) சமூகத்தின் லாபநஷ்டங்கள்
ஆ) சக்திக் கணக்கு
ஈ) சிக்கனச் சேமிப்புக் கணக்கு

# மண்புழு உரம்:கையேடு விவேகானந்த கேந்திரம்






மண்புழு உரம் தயாரிப்பு, அதன் உள்ளீடுகள், அதன் பயன்பாடு ஆகியவற்றைக் குறித்து விவரமாக தெரிந்து கொள்ள விவேகானந்த கேந்திரத்தின் இயற்கை வள அபிவிரித்தித் திட்டம் வெளியிட்டுள்ள இந்த நூலை வாங்கிப் படிக்கவும். விவேகானந்த கேந்திர NARDEP அமைப்பின் ஆராய்ச்சி அலுவலர் ராஜமணி எழுதியுள்ள இந்த நூல் எளிய தமிழில் கருத்துப்படங்களுடன், நல்ல விளக்கங்களுடன் அமைந்துள்ளது. மாணவர்கள் முதல் இயற்கை விவசாயிகள் வரை அனைவருக்கும் பயன்படும் ஒரு நூல் இது.




**மண்புழு உரம்**: ஆசிரியர்: எஸ்.இராஜமணி

விவேகானந்த கேந்திரா - நார்டெப்

கன்னியாகுமரி -629702

தொலைபேசி: 04652-246296

பக்கங்கள்:64 விலை ரூ 25/-